**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18 ஆம் நாள் திங்கட்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி.க. இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No.** 241/2018 வா.சா.3 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | தட்சணாமூர்த்தி | **வயது** | : | 69 |
| **த.பெ** | : | மாரிமுத்து | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | சாணார்பாளையம் | **தொழில்** | : | விவசாயம் |

**18.08.2025 – வா.சா. 3 முதல் விசாரணை (சாட்சி அழைப்பாணை மூலம் அழைத்து சாட்சியம் அளிக்கிறார்)**

பழனி, ஆறுமுகம் ஆகியோர்களை எனக்கு தெரியும். மேற்படி பழனி, ஆறுமுகம் அவர்களின் வீடு எங்குள்ளது என்றால் எங்கள் வீட்டிற்கும் அவர்கள் வீட்டிற்கும் 30 வீடுகள் தள்ளி இருக்கும். பிள்ளையார் கோவில் தெருவில் உள்ளது. வாதிகள் சுமாராக 50 , 60 வருடங்களாக மேற்படி வீட்டில் அவர்கள் பெற்றோருடன் வசித்து வருகிறார்கள். வாதிகள் எனக்கு உறவினர்கள் கிடையாது. நீதிமன்ற அழைப்பாணை பெற்றபிறகு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

**வா.சா.3 குறுக்கு விசாரணை**

வழக்கு சொத்தின் சா்வே நெம்பர், விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பழனி, ஆறுமுகம் ஆகியோர்களின் தந்தை பெயர் என்ன என்றால் சுப்ரமணி. சுப்ரமணி தற்போதுள்ள வீட்டில் இல்லாமல் வேறொரு வீட்டில் 30 வருடங்களுக்கு முன்பு இருந்தார்கள் என்றால் சரியல்ல எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து வழக்கு சொத்தில் உள்ள வீட்டில் தான் வசிததுவருகிறார்கள். வழக்கு சொத்தின் சர்வே நெம்பர் மற்றும் வாதிகள் குடியிருக்கும் வீட்டின் சா்வே நெம்பரும் ஒன்றுதான் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பழனி, ஆறுமுகம் குடியிருக்கும வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் தனிதனியே வசித்து வருகிறார்களா அல்லது ஒன்றாக வசித்து வருகிறார்களா என்றால் ஒரேவீடுதான் ஆனால் வாசப்படி தனிதனியாக உள்ளது. வாதிகள் மற்றும் கண்ணன் அவர்களுக்கும் என்ன பிரச்சனை எதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வாதிகள் வசித்து வரும் வீடு அவர்களுக்கு உரிய முறையில் கிரையம் பெறப்பட்டதா அல்லது பூர்வீகமாக பாத்தியப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் இந்த வழக்கில் அவசியமற்ற சாட்சி ஆகையால் என்னுடைய சாட்சியம் நீதிமன்றத்தில் ஏற்கப்படமாட்டாது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-B.Salma,
District Munsif,
Polur.